# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,929—1970 ඔක්තෝබර් 23 වැනි සිකුරාදා—1970.10.23

14,929 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித் தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைகட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 579 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. . | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 580 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 588 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 580 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 344

எண். டி. 17/ஆர்ஈசிரி

### தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நியமனங்கள்–துறத்தலும் நியமனங்களும்

#### நியமனங்கள்–துறத்தல்

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர்கள், (357 ஆம் அத்தியாயமான) தரைப் படைச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவின் கீழ் தாம் வகித்த ஆட்சேர்த்தல் அலுவலர்கள் நியமனங்களைத் தத்தமது பெயருக்கெதிராக கூறப்பட்ட திகதியிலிருந்து துறந்தனர் :

மேஜர் மார்க் அந்தனி பெரேரா சமரசிங்ஹ, சி. எல். ஐ.—1970, யூலை 12.

தற்காலிக மேஜர் கெட்டிஆரச்சி கிறேஷியன் ஹரி குணவர்த்தன, சி. ஈ.—1970, ஓகத்து 1.

கப்ரின் றைல் லோய்ட் விஜேசிங்ஹ, சி. ஏ. எஸ்.சி.—1970, மார்ச்சு 18.

#### நியமனங்கள்

கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலர்கள், (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவின் கீழ் தத்தமது பெயருக் கெதிரே கூறப்பட்ட திகதியிலிருந்து ஆட்சேர்த்தல் அலுவலர்களாகக் கடவர் :

கப்ரின் வடுகே மித்திரரத்ன வீரசூரிய, சி. ஈ.—1970, ஓகத்து 1.

லெவ்ரினன்ற் திலகபால ரத்னசேகர, சி. ஏ. எஸ். சி.—1970, மார்ச்சு 18.

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆல் ஒற்றோபர் மீ 13 ந் உ.

10-867

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்த மானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்
கொழும்பு,
1970 ம் ஆல் யூன் மீ 2 ந் உ.

1970 இன் இல. 345

எண். டி. 21/ஆர்ஈசிரி/385

### தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாணை அமர்வு துறத்தல்

தரைப்படையின் நிரந்தரப் படையின் கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970, நவெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து அரசாணை அமர்வு துறத்தலை அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார் :—

கப்ரின் ஹபங்கம ஆரச்சிகே சரத் விக்கிரமசூரிய, சி. ஈ.

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஏ. ஆர். இரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, ஒற்றோபர் 5.

10-709

---

1970 இன் இல. 346

எண். டி. 251/ஆர்ஈசிரி/4

### இலங்கை அரச கடற்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றம்

1970, ஓகத்து 7 ஆம் திகதியிலிருந்து கொமான்டர் ஆகக் கடவர் :

லெவ்ரினன்ற் கொமான்டர் (ஜி.) அல்பிரட் உவில்லியம் ஹென்றி பெரேரா, இலங். அ. க.

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு.
1970, ஒற்றோபர் 5.

10-813

---

1970 இன் இல. 347

எண். டி. 22/ஆர்ஈசிரி/173.

### இலங்கை அரச கடற்படை—நிரந்தர கடற்படையிலிருந்து நிரந்தர ஒதுக்குக் கடற்படைக்கான அலுவலரின் மாற்றம்

1970, ஓகத்து 1 ஆம் திகதி முதற்கொண்டு நிரந்தர கடற்படையிலிருந்து நிரந்தர ஒதுக்குக் கடற்படைக்கு கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் மாற்றல் ஆவதை அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்கள் அங்கிகரித்துள்ளார் :—

லெவ்ரினன்ற் (எஸ்எச்பிரீ) டி. டி. விக்கிரமநாயக்க, இலங். அ. க. (இளைப்பாறியவர்).

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, ஒற்றோபர் 5.

10-812

---

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 348

இல. ஈபி/ஏ/2.

### திருத்தம்

1970, செப்தெம்பர் மாதம் 11 ம் தேதிய 14,923 ம் இலக்க அரசாங்கக் கசெற்றின் I ம் பகுதியின் (I) ம் தொகுதியின் 508 ம் 509 ம் பக்கங்களில் வெளியிட்ட அறிவித்தலைப் பின்வரும் முறைப்படி பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திருத்தியிருக்கிறார்.

பின்வரும் நியமனத்தை இரத்துச்செய்து,

"கொழும்பு நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. டீ. டபிளியூ. டீ அல்விஸ் அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன், மேல் மாகாணப் பிசுக்காலாகவும், கொழும்பு நிருவாக மாவட்டத்தின் சுங்கச் சேகரிப்பாளராகவும் 1970, யூலை மாதம் 4 ம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

அதற்குப் பதிலாகக் கீழ்வரும் நியமனத்தைச் செய்யப்படுகிறது.

"கொழும்பு நிருவாக மாவட்டத்தின் அதிகார பூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. டீ. டபிளியூ. டீ அல்விஸ் அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன், மேல் மாகாணப் பிசுக்காலாகவும் 1970, யூலை மாதம் 4 ம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமைபுரிய.

டபிளியூ. ஆர். பி. திலகரத்ன,
நிரந்தரச் செயலாளருக்காக.

பொது நிருவாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
ரொரிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7.
1970, ஒற்றோபர் மாதம் 10 ம் தேதி,

10-737

---

1970 இன் இல. 349

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

திருமதி தேவலக்ஸ்மி பாலசுந்தரம் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக, கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

10-711

---

1970 இன் இல. 350

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

சோமபால திசாநாயக்க அவர்கள் கம்பஹ நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக, கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

10-712

---

1970 இன் இல. 351

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

சுசந்த மஹேஸ் முணசிங்க அவர்கள் பாணந்துறை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக, கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

10-713

---

## அரசாங்க அறிவித்தல்கள்

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

மாத்தறை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில, சிங்கள பாஷைகளில் நொத்தாரிசுவாகக் கடமைபார்க்க அனுமதிபெற்றுள்ள திருமதி பத்மா சமன்மலி ராமச்சந்ர, 107 ம் அத்தியாயமான நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 22(1 ம்) பிரிவின் கீழ் 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ம் திகதி தொடக்கம் நொத்தாரிசு பதவியிலிருந்து ராஜினாமாச் செய்வதாக அனுப்பிய கடிதம், கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் மேற்படி திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10-710

எல். டீ. பீ. 63/51.

## இலங்கை றெயில்வே சீருடை ஊழியர் சகாயநிதிச் சட்டம்

இலங்கை றெயில்வே சீருடை ஊழியர் சகாயநிதி எனப்படும் கூட்டுத்தாபனத்தால் (284 ஆம் அத்தியாயமான) றெயில்வே சீருடை ஊழியர் சகாயநிதிக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் அமைக்கப்பட்டு அப்பிரிவின் கீழ் நிதியமைச்சருக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி அவரால் உறுதிப்படுத்தப்பட்ட விதிகள்.

தி. எ. கூறே,
நிரந்தரச் செயலாளருக்காக,
நிதி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 11 ந் வ.

### இலங்கை றெயில்வே சீருடை ஊழியர் சகாயநிதி விதிகள்

### விதிகள்

சுருக்கப் பெயர்

1. இவ்விதிகள் இலங்கை றெயில்வே சீருடை ஊழியர் சகாயநிதி விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்விதிகளில் சந்தர்ப்பத்துக்கேற்ப வேறுவிதமாகப் பொருள் கொள்ள வேண்டியிருந்தாலொழிய " நிருவாகக் குழு " என்பது இச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட நிருவாகக் குழுவினையே குறிக்கும்.

" கூட்டுத்தாபனம் " என்பது றெயில்வே சீருடை ஊழியர் சகாயநிதியையே குறிக்கும்.

" கட்டளைச் சட்டம் " என்பது றெயில்வே சீருடை ஊழியர் சகாயநிதிக் கட்டளைச் சட்டத்தையும் " றெயில்வே " என்பது இலங்கை அரசினர் புகையிரதத் திணைக்களத்தையுமே குறிக்கும்.

அங்கத்துவம்

3. (1) புகையிரதத் திணைக்களத்தில் சீருடை ஊழியர் பிரிவைச் சேர்ந்த 40 வயதை அடையாத ஊழியர் ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனத்தில் அங்கத்துவம் பெறத் தகுதியுடையவராவர்.

(2) அங்கத்துவம் கோரி அனுப்பப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் கூட்டுத்தாபனத்தில் அங்கத்தவராவதற்கு செயலாளரும் பொருளாளருமானவரால் கோரப்படும் அங்கத்துவத் தகைமைச் சான்றுகளுடன் செயலாளரும் பொருளாளருமானவரின் விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். அவர் விண்ணப்பத்தை நிர்வாகக் குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) நிர்வாகக் குழு அத்தகைய விண்ணப்பத்தை எவ்விதகாரணமும் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ முடிவு செய்யலாம். எனவே, அத்தகைய தீர்ப்பு இறுதித் தீர்ப்பாகும்.

(4) நிர்வாகக் குழு அங்கத்துவ விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட தினம் முதல் கூட்டுத்தாபனத்தின் அங்கத்துவம் ஆரம்பமாகும்.

வார்சுதாரர் மாற்றம்

4. (1) எந்தவொரு அங்கத்துவரும் தனது வார்சுதாரரை அல்லது வார்சுதாரர்களை மாற்றவிரும்பினுல் அதற்கென வுள்ள பத்திரத்தில் விண்ணப்பித்துச் செயலாளரும் பொருளாளருமானவருக்கு அனுப்புவதன் மூலம் மாற்றிக்கொள்ளலாம்.

(2) வார்சுதாரரை அல்லது வார்சுதாரர்களை மாற்றுவது, அங்கீகாரத்தை நிர்வாகக்குழு வழங்கிய தினமுதல் சட்டபூர்வமானதாகும். நிர்வாகக்குழு வார்சுதாரர் அல்லது வார்சுதாரர்களின் மாற்றத்தை அங்கீகரிக்கு முன்னரே, அங்கத்தினர் மரணமடைந்தால் அந்த அங்கத்தினர் கோரிய வார்சுதாரர் மாற்றம் சட்டபூர்வமானதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

அன்ருடச்செலவு

5. கூட்டுத்தாபனத்தின் அன்ருடச் செலவுகளுக்காக ஒவ்வோர் ஆண்டிலும் ஏப்பிரல் மாதத்தில் ரூபா 1. 50ஐ ஒவ்வொரு அங்கத்தவரும் செலுத்த வேண்டும்.

மாதாந்தக் கட்டுப் பணம்

6. (1) ஒவ்வொரு அங்கத்தவரும் ஒவ்வொரு மாதத்திலும் ஆகக்குறைந்தது மூன்று ரூபாவைக் கட்டுப்பணமாகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்த வேண்டும்.

(2) எந்தவொரு அங்கத்தவராவது அதற்கும் அதிகமான தொகையைச் செலுத்த விரும்பினுல் அவ்விருப்பத்தைச் செயலாளரும் பொருளாளருமானவருக்கு எவ்வருடத்திலும் ஒக்ரோபர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எழுத்து மூலம் தெரிவித்தல் வேண்டும்.

(3) அங்கத்தவர்களால் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படவேண்டிய சகல பணத்தொகைகளும் சட்டரீதியாகக் கழிக்கப்படும் தொகையாகக் கொள்ளப்பட்டு, அவர்களின் சம்பளப் பட்டியலிலிருந்து அறவிடப்படும். திறைசேரியின் பிரதிச் செயலாளரும் புகையிரதத் திணைக்களப் பொது முகாமையாளரும் அல்லது அங்கத்தவர் சேவை புரியும் திணைக்களத்தின் தலைவரும் மேற்கூறிய விதத்தில் அத்தகைய பணத்தை அறவிட அதிகாரமுடையவர்களாவர்.

(4) நோய் அல்லது எதிர்பாராத நிகழ்ச்சியை முன்னிட்டு எந்தவோர் அங்கத்தவரும் செயலாளரும் பொருளாளருமானவருக்கு விண்ணப்பிப்பதன் மூலம் அறவிடப்படவிருக்கும் தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அறவிடாது இடைநிறுத்தஞ் செய்யும் அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

அலுவலகச் செலவுகள்

7. (1) 5 ஆவது விதியின் கீழ் அறவிடப்படும் பணங்களை, நிர்வாகக் குழு அலுவலகச் செலவுகளுக்காக உபயோகித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டத்தில் அங்கத்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய நிர்வாகக்குழு எந்தவொரு ஆண்டிலும் 5 ஆவது விதியின் கீழ் அறவிட்டிருந்த தொகைக்கு மேலதிகமாகச் செலவு செய்தலாகாது.

நீக்குதல்

8. (1) அரசாங்க சேவையிலிருந்தும் நீக்கப்படும் எந்தவொரு அங்கத்தவரும் அவ்விதம் நீக்கப்பட்ட தினத்திலிருந்து கூட்டுத்தாபனத்தின் அங்கத்துவத்தை இழப்பர். இவ்விதியின் 2 ஆம், 3 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைப் பெற அவ்வங்கத்தினர் உரித்துடையராவர்.

(2) வஞ்சித்தல் அல்லது குடிமயக்கம் காரணமாக ஓர் அங்கத்தவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்டால் கூட்டுத்தாபனக் கணக்குப் புத்தகங்களில் கூட்டுத்தாபனத்துக்கும் அரசாங்கத்திற்கும் அவர் கொடுக்கவிருக்கும் தொகை நீங்கலாக அவருக்குச் சேரவிருக்கும் தொகை மாத்திரம் கொடுக்கப்படல் வேண்டும்.

(3) வஞ்சித்தல் அல்லது குடிமயக்கம் தவிர்ந்த வேறுகாரணங்களுக்காக அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்பட்ட அங்கத்தவருக்கு, கூட்டுத்தாபனத்துக்கும் அரசாங்கத்துக்கும் அவரால் செலுத்தப்படவிருக்கும் தொகையைக்கழித்த பின் 19 ஆவது விதியின் ஏற்பாடுகளுக்கிணங்க கணக்கிடப்பட்ட நன்கொடைத் தொகையின் அரைவாசி செலுத்தப்படல் வேண்டும்.

அங்கத்துவத்தை இழத்தல்

9. (1) ஓர் அங்கத்தவர் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியதால் அல்லது சேவையிலிருந்து நீக்கப்பட்டதால் அல்லது தமது கட்டுப்பணத்தை, நன்கொடையை, வட்டியை அல்லது கூட்டுத்தாபனத்திற்குச் சேரவேண்டிய பணத்தை ஆறுமாதங்களுக்குத் தொடர்ந்து செலுத்தத் தவறியதன் பேரில் தமது அங்கத்துவத்தை வாபஸ் பெற்றதால், சகாயநிதியில் தமது அங்கத்துவத்தை இழப்பார்.

(2) ஓர் அங்கத்தவர் சம்பளமில்லாத லீவு, நீண்டகாலலீவு, சேவையிலிருந்து இடைநிறுத்தம் அல்லது நோய்வாய்ப்படல் காரணமாக அவரது கட்டுப்பணம் அறவிடப்படாதிருப்பின் அல்லது கூட்டுத்தாபனத்துக்குச் சேரவேண்டிய கட்டுப்பணம் நன்கொடை அல்லது வட்டியைக் கொடுக்கத்தவறியிருப்பின் அதனை நிர்வாகக் குழுவுக்கு எழுத்துமூலம் தெரிவித்தல் வேண்டும். அத்தகைய விடயத்தில் நிர்வாகக்குழு எடுக்கும் முடிவே இறுதியானதாகும்.

**திணைக்களமாற்றம்**

10. (1) புகையிரதத் திணைக்களத்திலிருந்து வேறொரு அரசாங்கத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்ட ஓர் அங்கத்தவர் தமது விருப்பத்திற்கிணங்கக் கூட்டுத்தாபனத்தில் அங்கத்துவத்தை தொடர்ந்து வகிக்கவோ வாபஸ் பெறவோ முடியும்.

(2) புகையிரதத் திணைக்களத்திலிருந்து வேறொரு அரசாங்கத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்ட ஓர் அங்கத்தவர் அத்தகைய மாற்றத் தினத்திற்குக் குறைந்தது மூன்று மாத காலத்திற்கு முன் செயலாளரும் பொருளாளருமானவருக்கு எழுத்து மூலம் தெரிவிப்பதன் பேரில் தமது அங்கத்துவத்தை வாபஸ் பெறலாம். அவ்விதம் வாபஸ் பெறாதவிடத்து அவ்வங்கத்தவர் தொடர்ந்து இவ்விதிகளின் கீழ் அங்கத்தவர் என்ற முறையில் பெறும் சகல நன்மைகளையும் அனுபவிப்பார்.

(3) ஓர் அங்கத்தவர் புகையிரதத் திணைக்களத்திலிருந்து வேறொரு திணைக்களத்திற்கு மாற்றப்பட்டதன் காரணமாகத் தமது அங்கத்துவத்தை வாபஸ் பெற்றால் அவருக்கு நன்கொடை வழங்கப்படமாட்டாது. ஆனால், கூட்டுத்தாபனத்தில் அவர் பட்டிருக்கும் கடனைக் கழித்து நிதிப் புத்தகத்தில் அவர் பெயரில் வரவு வைக்கப்பட்டிருக்கும் பணம் அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும்.

(4) அவர் பெயரில் வரவு வைக்கப்பட்டிருக்கும் பணம் அவர் பட்டிருக்கும் கடனை இறுக்கப் போதியதாக இல்லாதவிடத்து திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கும் அவர் மாற்றம் பெற்றிருக்கும் திணைக்களத்தின் தலைவருக்கும் கூட்டுத்தாபனத்தின் சார்பாக அவரது சம்பளப்பட்டியலிலிருந்து அப்பணத்தைக் கழிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

**இராஜினாமாக்கள்**

11. (1) அரசாங்க சேவையிலிருந்து இராஜினாமாச் செய்த ஒரு அங்கத்தவர் கூட்டுத்தாபனத்தின் அங்கத்துவத்தை இழப்பார். கூட்டுத்தாபனப் புத்தகத்தில் அவரது பெயரில் வரவு வைக்கப்பட்டிருக்கும் தொகையில் கூட்டுத்தாபனத்திடம் அவர் பட்டிருக்கும் கடன் நீங்கலாக உள்ள தொகை அவருக்கு வழங்கப்படல் வேண்டும்.

(2) புகையிரதத் திணைக்களத்தில் அல்லது வேறொரு அரசாங்கத் திணைக்களத்தில் சேவை புரியும்பொழுதே ஒரு அங்கத்தவர் தமது அங்கத்துவத்தை இராஜினாமாச் செய்தால் கூட்டுத்தாபனக் கணக்குப் புத்தகத்தில் அவர்பெயரில் வரவு வைக்கப்பட்டிருக்கும் எல்லாப் பணங்களையும் இழப்பார். அவரிடமிருந்து போகுமதியான பணம் எல்லாம் கொடுக்கப்பட்ட பின்னரே அவரது இராஜினாமா வலிமைபெறும்.

(3) தமது அங்கத்துவத்தை இராஜினாமாச் செய்யும் ஒரு அங்கத்தவர் கூட்டுத்தாபனத்துக்கிறுக்கவிருக்கும் பணத்திற்கு மாதத்திற்கு ½ சத விகித வட்டியுடன் ஒவ்வொரு மாத இறுதியிலும் தவணைப்பணமாகக் கட்டுவதற்கு நிர்வாகக்குழுவின் விருப்பத்திற்கேற்ப செயலாளரும் பொருளாளருமானவரின் அனுமதியைப் பெறலாம்.

(4) புகையிரதத் திணைக்களப் பொது முகாமையாளரும் அல்லது அந்த அங்கத்தவர் சேவை புரியும் திணைக்களத் தலைவரும் திறைசேரிப் பிரதிச் செயலாளரும் அங்கத்தவரிடமிருந்து கூட்டுத்தாபனத்துக்குச் சேரவேண்டிய பணத்தை அவரது சம்பளப் பட்டியலிலிருந்து அறவிட்டுக்கொள்ள அதிகாரமுடையராவர்.

**அங்கத்தவர் உத்தியோகத்தை மீளப்பெறுதல்**

12. (1) ஓர் அங்கத்தவர் அரசாங்க சேவையில் மீண்டும் சேர்க்கப்படும் போது தமது அங்கத்துவத்தை இழந்தகாலை கூட்டுத்தாபனத்திடம் எந்த நன்கொடையையும் பெற்றுக்கொள்ளாமலிருந்தால் நிர்வாகக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் கூட்டுத்தாபன அங்கத்துவத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும். அத்தகைய அங்கத்தவர் தமது உத்தியோகத்தை மீளப் பெற்ற தினத்திலிருந்து ஆறு மாத காலத்துக்குள் விண்ணப்பம் செய்தல் வேண்டும். அத்துடன் அவர் அங்கத்துவத்தை இழந்தபொழுது தொடர்ந்து கூட்டுத்தாபனத்தில் அங்கத்தவராயிருந்திருந்தால் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தியிருக்கக்கூடிய கட்டுப்பணம், நன்கொடை அல்லது வட்டி முதலியவற்றை மொத்தமாகவோ அல்லது தவணைப் பணமாகவோ கட்ட வேண்டும்.

(2) அத்தகைய அங்கத்தவர் நன்கொடை பெற்றிருந்தால் அதனை மொத்தமாக ஒரே முறையில் திருப்பிக்கொடுத்தல் வேண்டும். இவ்விதியின் முதலாம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தவேண்டிய மற்றும் பணத்தையுங் கொடுத்தல் வேண்டும்.

**இளைப்பாறல்**

13. (1) ஓர் அங்கத்தவர் இளைப்பாறினால் அல்லது மரணமடைந்தால் அவரது பெயரில் வரவு வைக்கப்பட்டிருக்கும் பணத்தில் கூட்டுத்தாபனத்துககு அவரிடமிருந்து சேரவேண்டிய தொகையைக் கழித்து அவ்வங்கத்தவர் சேவை செய்த திணைக்களத் தலைவர் அல்லது துணைத் திணைக்களத்தலைவர் அவர் இளைப்பாறியதாக அல்லது மரணமடைந்த தாக அறிவித்தல் கொடுத்த தினத்திலிருந்து மூன்று மாத காலத்துககுள் மிகுதித் தொகையைக் கொடுத்தல் வேண்டும்.

(2) நிர்வாகக் குழு சடுதிக் காரணத்திற்காக அவரது நன்கொடைப் பணத்தில் ரூபா 500 க்கு மேற்படாத தொகையை ஓர் அங்கத்தவரின் எழுத்துமூலமான விண்ணப்பத்தின்பேரில் முற்பணமாக வழங்கலாம்.

**மரணம்**

14. (1) ஓர் அங்கத்தவர் மரணமடைந்தால் அத்தகைய அங்கத்தவரின் பெயரில் வரவு வைக்கப்பட்டிருக்கும் எல்லாப்பணங்களையும், நன்கொடைப் பணங்களையும் அவர் சேவை செய்த திணைக்களத் தலைவரால் அம்மரணம் சம்பந்தமான அறிவித்தல் கொடுக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்கிடையில் அவரது வார்சுதாரருக்கு அல்லது வார்சுதாரர்களுக்குக் கொடுத்தல் வேண்டும்.

(2) அங்கத்தவர் வார்சுதாரரை நியமிக்காதிருந்தால் அல்லது அந்த வார்சுதாரர் இறந்திருந்தால் அவரின் பெயரில் வரவு வைக்கப்பட்டிருக்கும் பணங்களில் அவரது மனைவிக்கு அரைப்பங்கையும், சட்டப்படியுள்ள பிள்ளைகளுக்கு அரைப்பங்கையும், மூன்றும் பந்தியில குறிப்பிட்டுள்ள சாதனங்களைச் சமர்ப்பித்ததும் கொடுத்தல் வேண்டும்.

(3) மனைவியின் விடயத்தில் விவாக சாட்சிப் பத்திரமும், பிள்ளைகள் விடயத்தில் பிறப்புச்சாட்சிப் பத்திரமும், காரியாதிகாரியின் மேலொப்பமிடப்பட்ட கிராம சேவகரின் கடிதத்துடன் நிர்வாகக்குழுவுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(4) பிள்ளைகள் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களெனின் அப்பிள்ளைகளின் பெயரில் பணங்கள் இலங்கைச் சேமிப்பு வங்கியில் போடப்பட்டு, சேமிப்புப் புத்தகங்கள் பாதுகாவலரின் பொறுப்பில் விடப்படும்.

(5) இவ்விதியின் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பந்திகளில் கோரப்படும் உரிமைக் கோரிக்கை வராவிடில் அவ்வங்கத்தவர் மரணமடைந்த தினத்திலிருந்து 5 வருடங்கள் கழிந்தபின் அவரது உரித்தாளர்களின் கவனத்தையீர்த்து அவரது பெயரில் வரவு வைக்கப்பட்டிருக்கும் பணங்களைக்கோரி அவ்வுரித்தாளர்கள் உரிமைக் கோரிக்கையை அனுப்பவேதுவாக இரு புதினப் பத்திரிகைகளில் அறிவித்தல் கொடுக்கப்படும்.

(6) மரணமடைந்த அங்கத்தவர்களின் உரித்தாளர்கள் தமது உரிமைக் கோரிக்கையை நிர்வாகக்குழுவிற்கு அனுப்பலாம். அத்தகைய கோரிக்கைகளுக்கு நிர்வாகக்குழு எடுக்கும் முடிவு இறுதியானதும் முடிவானதுமாகும்.

(7) உரிமை கோரப்படாத அல்லது நிர்வாகக் குழுவினால் நிராகரிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கை சம்பந்தப்பட்ட பணம் இருப்பின், இவ்விதியின் (5) ஆவது பந்தியில் குறிபபிட்டவாறு அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 3 மாதம் கழிந்த பின் அப்பணம் பறிமுதல் செய்யப்பட்டு மரண உதவி முற்பணக் கணக்கில் சேர்க்கப்படும்.

**மரண உதவி முற்பணம்**

15. (1) ஓர் அங்கத்தவர் மரணமடைந்தால் இவ்விதியின் (2) ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு மரணச் சாட்சிப் பத்திரத்தை அல்லது அங்கத்தவர் சேவை செய்த நிலையத்தில் அல்லது அலுவலகத்தின் பொறுப்புத்தியோகத்தரால் கொடுக்கப்பட்ட மரண உறுதிச்சாட்சிப்பத்திரத்தைச் சமர்ப்பித்ததும் விதவையிடம் அல்லது பிள்ளைகளிடம் அல்லது உறவினர்களிடம் அல்லது வார்சுதாரர்களிடம் மரண உதவி முற்பணம் வழங்கப்படும்.

(2) (1) ஆம் பந்தியில் குறிப்பிட்ட மரணவுதவி முற்பணம் சகாயநிதியிலிருந்து கீழ்க்காணும் முறையில் விதவைக்கு, பிள்ளைகளுக்கு, உறவினர்களுக்கு அல்லது வார்சுதாரர்களுக்கு வழங்கப்படும் :

(அ) அங்கத்துவம் ஒருவருடத்திற்கு மேற்பட்டதாகவும் 5 வருடங்களுக்கு அதிகப்படாததாகவும் இருப்பின் மரண உதவி முற்பணம் ரூபா 200 – க்கு மேற்படாது ;

(ஆ) அங்கத்துவம் 5 வருடங்களுக்கு மேற்பட்டதாயின் மரணவுதவி முற்பணம் ரூபா 500/– க்கு மேற்படாது.

அண்டிவாழ்ப வர்களுக்கு மரணவுதவி முற்பணம்

16. (1) மணஞ் செய்யாத அங்கத்தவரெனில் பெற்றோர் ஒருவர் இறந்தால், மணஞ் செய்த அங்கத்தவரெனில் மனைவி அல்லது பிள்ளை இறந்தால், பிள்ளையெனில் 2 வயதிற்கு மேலும் 18 வயதிற்குட்பட்டுமிருப்பின் மரணச் சாட்சிப் பத்திரத்துடன் அல்லது இறந்த பிரதேசத்தைச் சேர்ந்த காரியாதிகாரியின் மேலொப்பத்துடன்கூடிய கிராமசேவகரின் இறப்புச் சாட்சிப் பத்திரத்துடன் செயலாளரும் பொருளாளருமானவரிடம் விண்ணப்பித்தால் (2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மரணவுதவி முற்பணம் வழங்கப்படும்.

(2) அத்தகைய ஒவ்வொரு விடயத்திலும் அங்கத்தவர் ஒருவருடத்திற்கு மேலும் 5 வருடத்திற்கு மேற்படாமலும் அங்கத்துவம் வகித்திருப்பின் ரூபா 100/– வழங்கப்படும். 5 வருடத்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்கு ரூபா 300/– வழங்கப்படும்.

(3) இவ்விதியின் பிரகாரம் வழங்கப்படும் மரணவுதவி முற்பணம் மாதம் 5 ரூபாவிற்குக் குறையாத தவணைப்பணமாக அறவிடப்படும். எந்த அங்கத்தவருக்கும் முன்னர் வழங்கப்பட்ட மரணவுதவி முற்பணம் முற்றாகத்திருப்பிக் கொடுக்கப்படும் வரை, அடுத்தொரு முற்பணம் வழங்கப்படமாட்டாது. முதலாவது மரணவுதவி முற்பணம் முற்றாக இறுக்கப்படுவதற்கு முன் அடுத்தொரு மரணம் சம்பவித்தால் 16 (1) ஆம் விதியில் குறிப்பிடப்பட்ட சாதனங்களைச் சமர்ப்பித்தால், இரண்டாவது மரணம் சம்பவித்த காலம் வரை அறவிடப்பட்ட தொகை மாத்திரம் வழங்கப்படும்.

(4) ,மரணவுதவி முற்பணத்தில் ஒவ்வொரு மாதத்திலும் எஞ்சியுள்ள தொகைக்கு மாதம் ½ சத விகித வட்டி அறவிடப்படும்.

(5) ஓர் அங்கத்தினர், மரணவுதவி முற்பணத்தை மோசடியாகப் பெறும் எண்ணத்துடன் பிழையான தகவலைக் கொடுத்ததாக அல்லது பொய்யான உறுதியுரையைக் கூறியதாக அல்லது நிர்வாகக் குழுவைதவ றுசெய்யத் தூண்டியதாகக் கண்டுபிடிக்கப்பட்டால், அத்தகைய அங்கத்தவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் திணைக்களத்தலைவருக்கு அவ்விடயம் தெரிவிக்கப்படுவதுடன் கூட்டுத்தாபனத்தில் அவரது அங்கத்துவமும் இடைநிறுத்தஞ் செய்யப்படும்.

(6) இவ்விதிகளின்கீழ் மரணவுதவி முற்பணம் வழங்குதல், நிருவாகக்குழு இம்முற்பணத்தை வழங்குவதற்காக ரூபா 50,000/– ஐ வைப்புப்பணமாகப் போட்ட பின்னரே ஆரம்பிக்கப்படும். மரணவுதவி முற்பணம் வழங்கத் தொடங்கும் தினத்திற்குக் குறைந்தது 14 நாட்களுக்கு முன் குறைந்தது இரு உள்ளூர்த் தினபத்திரிகைகளில் ஓர் அறிவித்தல் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(7) மரணவுதவி முற்பணத்தை அறவிடும் பொழுது அதனை மரணவுதவி முற்பணக் கணக்கில் வரவு வைத்துக் கணக்குப் புத்தகத்தில் வேறு தலைப்பில் குறிப்பிடுதல் வேண்டும்.

மனநோய்

17. (1) முறையாக நியமிக்கப்பட்ட ஒரு வைத்தியக் குழுவினால் ஓர் அங்கத்தவர் மனநோயினால் வருந்துகிறாரெனக் கொள்ளப்பட்டு அவர் சேவைக்குத் தகுதியற்றவரெனச் சிபார்சு செய்யப்படும் பட்சத்தில் அவர் பெயரில் கூட்டுத்தாபனத்தில் வரவு வைக்கப்பட்டிருக்கும் பணம் அவர் பூரண சுகமடைந்துள்ளதாக வைத்தியக் குழுவினால் வழங்கப்பட்ட வைத்திய சாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வரை கூட்டுத்தாபனத்திலேயே வைக்கப்பட்டிருக்கும். அவ்வங்கத்தவர் மனநோயால் பீடிக்கப்பட்டிருக்கும் பொழுதே இளைப்பாறினால் அல்லது மரணமடைந்தால் அவரது பெயரில் வரவு வைக்கப்பட்டிருக்கும் பணம் அவரது வார்சுதாரருக்கு அல்லது உரித்தாளருக்கு அல்லது இங்கு குறிப்பிட்டுள்ள சட்டரீதியான பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும்.

(2) அத்தகைய அங்கத்தவரொருவர் மரணமடையும் பொழுது அவருக்கு மனைவியோ பிள்ளைகளோ இல்லாதிருப்பின் அவரது உரித்தாளர்களுக்கு அல்லது சட்டரீதியான பிரதிநிதிகளுக்கு அவர் பெயரிலுள்ள பணம் வழங்கப்படும்.

நிர்வாகக்குழு வழங்கும் கொடுப்பனவு

18. இவ்விதிகளின்கீழ் வார்சுதாரருக்கோ விதவைக்கோ உரித்தாளர்களுக்கோ நிர்வாகக் குழுவினால் வழங்கப்படும் கொடுப்பனவுகள் சட்டப்பெறுமதியானவையாகும். மரணமடைந்த அங்கத்தவர் சார்பில் கூட்டுத்தாபனத்துக்கெதிராக விடுக்கப்படும் எவரது உரிமைக் கோரிக்கையும் செல்லுபடியாகாது.

நன்கொடைகள்

19. (1) மூன்று வருடத்திற்கு மேற்பட்ட கால அங்கத்துவம் வகிக்கும் ஓர் அங்கத்தவர் இளைப்பாறினால் கீழ்க்காணும் ஏற்பாடுகளின் பிரகாரம் நன்கொடை பெறுவார்.

(2) மூன்று வருட அங்கத்துவமுள்ள ஓர் அங்கத்தவர் இளைப்பாறும் பொழுது நன்கொடைக் கணக்கிற்கு அவரால் செலுத்தப்பட்ட நன்கொடைப் பணத்தில் இருமடங்கு கூட்டுத்தாபனத்துக்கு அவரால் இறுக்கப்படவிருக்கும் கடன் நீங்கலாக வழங்கப்படும்.

(3) மூன்று வருட பூர்த்தியுள்ள அங்கத்துவத்தை வகிக்கும் ஓர் அங்கத்தவர் மரணமடைந்தால், அவர் இறந்த தினத்தன்று கூட்டுத்தாபனத்தில் மூன்றுவருட அங்கத்துவத்தைப் பூர்த்தி செய்த அங்கத்தவர்களின் எண்ணிக்கையின்படி அவர் அங்கத்துவம் வகித்த ஒவ்வொரு ஆண்டுக்கும் மூன்று சதம் விகிதமாகக் கணக்கிட்டு அவரால் கூட்டுத்தாபனத்துக்கு இறுக்கப்படவிருக்கும் கடனைக் கழித்து, எஞ்சிய தொகை நன்கொடைப் பணமாக வழங்கப்படும். இவ்விதிக்கு ஆறு மாத காலத்திற்கு மேற்பட்ட எந்தக்காலமும் ஒரு பூரண வருடமாகக் கொள்ளப்படும்.

நன்கொடைகளை அறவிடல்

20. நன்கொடை, முதலாவதாக கூட்டுத்தாபனத்தின் நிதிகளிலிருந்து எடுக்கப்பட்டு அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும். அடுத்தாற்போல் அங்கத்தவர்களிடம் சிறப்புக்கோரிக்கை விடுப்பதன் மூலம் சகலரிடமும் சரிசமவிகிதமாக பணம் அறவிடப்படும். அவ்வித சிறப்புக்கோரிக்கை விடுவிக்கப்பட்ட அங்கத்தவர்களிடமிருந்து அவ்வருடத்திலேயே அல்லது அடுத்த வருடத்தின் ஆறுமாதம் கழியுமுன்னரே அப்பணம் அறவிடப்படும்.

நன்கொடை ஒதுக்க நிதி

21. கட்டளைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் நன்கொடை ஒதுக்க நிதிக்காக 10,00,000/– ரூபா வைப்புப்பணமாக் கட்டுப்படுதல் வேண்டும்.

கட்டுப்பணக் கடன்கள்

22. (1) நிர்வாகக் குழு அதன் துணிபின்படி அங்கத்தவரின் நன்மைக்காகவெனக் கருதும் எத்தேவைக்கும் குறைந்தது ஒருவருடகால அங்கத்துவம் வகித்த ஓர் அங்கத்தவருக்கு கூட்டுத்தாபனத்தின் கணக்குப் புத்தகங்களில் அவர் பெயரில் வரவு வைக்கப்பட்டிருக்கும் கட்டுப்பணத்தின முக்கால பங்கிறகுச் சமமான தொகையைக் கடனாகக் கொடுக்கலாம்.

(2) அத்தகைய கடன்களைப் பெற விரும்புபவர் கடன் வழங்குவதற்கெனவுள்ள விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பம் செய்து அங்கத்தவர் வைப்புப் புத்தகத்துடன், கடன் தேவைப்படும் காரணம் காட்டும் கடிதத்தோடு செயலாளரும் பொருளாளருமானவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(3) விண்ணப்பப் படிவத்தின் பின்புறத்தில் அச்சிட்டுள்ள ஒப்புக்கொள்ளற் படிவத்தை நிரப்பி 10 சத முத்திரை மீது கையொப்பமிட்டு இரு சாட்சிகளின் கையொப்பங்களுடன் அனுப்புதல் வேண்டும். காசோலைகளிற் கையொப்பமிடும் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் அவ்வித கடன் விண்ணப்பங்களில் சாட்சியாகக் கையொப்பமிட உரித்துடையராகார்.

(4) முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பமும், பற்றுச்சீட்டும் கிடைக்கப் பெற்றதும் கடன் தொகைக்கான காசோலையும் பற்றுவரவு பதியப்பட்ட வைப்புப் புத்தகமும் அங்கத்தவருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(5) காசோலையையும் வைப்புப் புத்தகத்தையும் பெற்றுக்கொண்ட அங்கத்தவர், வைப்புப் புத்தகத்தில் கணக்குச் சரியாக எழுதப்பட்டிருக்கிறதாவென்பதைக்கவனித்து, ஏதும் பிழை கண்டால் உடனடியாக அதனை செயலாளரும் பொருளாளருமானவருக்குத் தெரிவித்து அப்பிழையைத் திருத்திக் கொள்ளல் வேண்டும்.

(6) இவ்விதியின் (1) ஆம் பந்தியின் பிரகாரம் ஓர் அங்கத்தவர்க்கு வழங்கப்படும் ஆகக்குறைந்த கடன் 20/– ரூபாவாகும்.

(7) இவ்விதிகளின் பிரகாரம் செயலாளரும் பொருளாளருமானவரும் தலைவரும் இரு உப தலைவர்களும் கடன் வழங்கும் அதிகாரமுடையவராவர். ஒவ்வொரு மாத இறுதியிலும் அம்மாதத்தில் வழங்கப்பட்ட கடன் விவரங்களைக் கொண்ட அட்டவணையையும் மாதாந்த விவரக் கூற்றினையும் நிர்வாகக்குழுவின் அங்கீகாரத்திற்காக அனுப்புதல் வேண்டும். இவ்வட்டவணையினதும் மாதாந்த விவரக்கூற்றினதும் இணைப்படியொன்று மாதாந்தம் புகையிரதத்திணைக்களப் பொது முகாமையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(8) கட்டுப்பணக் கடன் விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற மூன்று நாட்களுக்குள் பதில் இறுக்கப்படல் வேண்டும். கடன் வட்டி மாதத்திற்கு ½ சத வீதமாகும். கடனுக்கு வட்டி அறவிடப்படும்பொழுது குறை மாதம் முழு மாதமாகக் கணக்கிடப்படும். கடனிறுக்கக் கட்டப்படும் ஆகக்குறைந்த மாதத் தவணைப் பணம் 5/– ரூபாவாகும்.

சம்பளக் கடன்கள்

23. (1) மூன்று வருடத்திற்கு மேற்பட்ட காலம் அங்கத்தவராக இருந்தவருக்கு திடீர் நிகழ்ச்சி, நோய் அல்லது இடுக்கண் நேரும்பொழுது அல்லது வேறு நல்லகாரணத்திற்காகக் கீழ்க்காணும் ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்வாகக் குழு அதன் துணிபிற்கேற்பச் சம்பளக்கடன் கொடுக்கலாம்.

(2) சம்பளத்தின் 50 சதவீத வரம்புக்குள், அன்றேல் அரசாங்க ஊழியர்களின் சம்பளப் பட்டியல் கழிவுகள் சம்பந்தமாக நிதியமைச்சரால் காலத்திற்குக்காலம் ஆக்கப்படும் வேறெந்த விதியின் பிரகாரமாவது கூட்டுத்தாபனத்திற்காக அதன் சார்பில் சம்பளப் பட்டியலிலிருந்து பணத்தை அறவிடமுடியுமாயின் நிர்வாகக் குழு, அங்கத்தவர்களுக்கு அத்தகைய சம்பளக் கடன்களை வழங்கலாம்.

(3) கூட்டுத்தாபன அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் சம்பளக் கடன் படிவத்தை முறையாக நிரப்பி இரு சாட்சிகளினதும் இரு பிணைகாரர்களினதும் (பிணைகாரர் தேவைப்படின்) அத்தாட்சியுடன் செயலாளரும் பொருளாளருமானவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) எவ்வங்கத்தவரும் தமக்குத் தெரிந்த இன்னொரு அங்கத்தவரின் எக்கடன் விண்ணப்பத்திற்கும் சாட்சியாகக் கையொப்பமிடலாம். ஆயினும் பிணைகாரராக இரு அங்கத்தவருக்கு மாத்திரமே ஓர் அங்கத்தவர் கையொப்பமிட உரித்துடையராவார்.

(5) ஆறுமாதச் சம்பளக் கடன்பெற உரித்துடைய விண்ணப்பதாரிகளுக்கு பத்துவருடத்திற்கு மேற்பட்ட கால அங்கத்துவம் வகிப்பவர் மாத்திரமே பிணைகாரராக ஏற்றுக்கொள்ளப்படுவர்.

(6) ஒன்பது மாதச் சம்பளக் கடன் பெற உரித்துடைய விண்ணப்பதாரிகளுக்கு பதினைந்து வருடங்களுக்கு மேற்பட்ட கால அங்கத்துவம் வகிப்பவர் மாத்திரமே பிணைகாரராக ஏற்றுக்கொள்ளப்படுவர்.

(7) ஒரு வருடச் சம்பளக் கடன் பெற உரித்துடைய விண்ணப்பதாரிகளுக்கு 20 வருடகாலத்திற்கு மேற்பட்ட கால அங்கத்துவம் வகிப்பவர் மாத்திரமே பிணைகாரராக ஏற்றுக்கொள்ளப்படுவர்.

(8) செயலாளரும் பொருளாளருமானவர், நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை அதற்கெனவுள்ள பதிவேட்டில் தொடர் வரிசைப் பிரகாரம் பதிவுசெய்து ஒவ்வொரு மாத இறுதியிலும் மேற்கூறிய விண்ணப்பங்களை நிர்வாகக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். நிர்வாகக்குழுவினால் அல்லது கடன்வழங்க அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் உத்தியோகத்தர்களால் அனுமதிக்கப்பட்ட கடன்கள் வழங்கப்படும்.

(9) ஒவ்வொரு சம்பளக் கடன் முற்பணமும் கீழ்க்காணும் ஏற்பாடுகளுக்குட்பட்டிருக்கும் :—

(அ) மூன்று வருடத்திற்கு மேற்பட்டும் ஐந்துவருடத்திற்கு மேற்படாதும் அங்கத்துவம் வகிப்பவர் ஒரு மாத அடிப்படைச் சம்பளத்திற்கு அதிகரிக்காத தொகை அல்லது 200/– ரூபா, இரண்டில் எது கூடியதோ அதனைக் கடன் முற்பணமாகப் பெறுவார்.

(ஆ) ஐந்துவருடத்திற்கு மேற்பட்டும் பத்துவருடத்திற்கதிகரிக்காதும் அங்கத்துவம் வகிப்பவர் மூன்றுமாத அடிப்படைச் சம்பளத்திற்கு மேற்படாத தொகை அல்லது 500/– ரூபா, இரண்டில் எது கூடியதோ அதனைக் கடன் முற்பணமாகப் பெறுவார்.

(இ) பத்துவருடத்திற்கு மேற்பட்டும் பதினைந்து வருடத்திற்கதிகரிக்காதும் அங்கத்துவம் வகிப்பவர் ஆறுமாத அடிப்படைச் சம்பளத்திற்கதிகரிக்காத தொகை அல்லது 1,000/– ரூபா, இரண்டில் எது கூடியதோ அதனைக் கடன் முற்பணமாகப் பெறுவார்.

(ஈ) பதினைந்து வருடத்திற்கு மேற்பட்டும் இருபது வருடத்திற்கதிகரிக்காதும் அங்கத்துவம் வகிப்பவர் ஒன்பது மாத அடிப்படைச் சம்பளத்திற்கு மேற்படாத தொகை அல்லது 1,500/– ரூபா, இரண்டில் எது கூடியதோ அதனைக் கடன் முற்பணமாகப் பெறுவார்.

(உ) இருபது வருடத்திற்கு மேற்பட்ட அங்கத்துவம் வகிப்பவர் ஒருவருட அடிப்படைச் சம்பளத்திற்கு மேற்படாத தொகை அல்லது 2,000/– ரூபா, இரண்டில் எது கூடியதோ அதனைக் கடன் முற்பணமாகப் பெறுவார்.

(10) இவ்விதிகளின் பிரகாரம் கடனாக வழங்கப்படும் ஆகக்கூடிய தொகை 2,000/– ரூபாவிற்கு மேற்படாது. இவ்விதிகளின்கீழ் எடுக்கப்பட்ட கடன் முற்றாக இறுக்கப்படும் வரை அடுத்தவொரு சம்பளக் கடனை எவ்வங்கத்தவரும் பெறத் தகுதியுடையவராகார். கடன் பூரணமாக இறுக்கப்படும்வரை கடன் தவணைப்பணத்தைக் கட்டுவதற்கு எந்த அங்கத்தவரும் குறைக்க அல்லது மறுக்க முடியாது.

(11) சம்பளக் கடன் முற்பணப் பற்றுச்சீட்டு நிரப்பப்பட்டுச் செயலாளரும் பொருளாளருமானவருக்கு வைப்புப் புத்தகத்துடன் அனுப்பப்படல் வேண்டும். காசோலையும் வைப்புப் புத்தகமும், ஒப்புக்கொள்ளற் பற்றுச்சீட்டைப் பெற்ற மூன்று நாட்களுக்குள் அங்கத்தவருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(12) சம்பளக் கடனுக்கு, ஒவ்வொரு மாதத்திலும் எஞ்சியுள்ள தொகைக்கு மாதம் ½ சதவீதம் வட்டி அறவிடப்படும்

சம்பளக்கடன் அறவிடல்

24. (1) இவ்விதிகளின் 23 ஆம் விதியின் பிரகாரம் அளிக்கப்படும் சம்பளக் கடன்கள் கீழ்க்காணும் ஏற்பாடுகளுக்கிணங்க வட்டியுடன் தவணைப் பணமாக அறவிடப்படும்.

(அ) எடுக்கப்படும் கடன் ஒரு மாத அடிப்படைச் சம்பளத்திற்கு மேற்படாத தொகையாக அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய தொகையாகவிருப்பின் அக்கடன் 18 மாத சமதொகைத் தவணைப்பணங்களாகத் திருப்பிக் கொடுபடுதல் வேண்டும்.

(ஆ) எடுக்கப்படும் கடன் மூன்று மாத அடிப்படைச்சம்பளத்திற்கு மேற்படாத தொகையாக அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய தொகையாகவிருப்பின் அக்கடனை 24 மாத சமதொகைத் தவணைப் பணங்களாகத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

(இ) எடுக்கப்படும் கடன் ஆறுமாத அடிப்படைச் சம்பளத்திற்கு மேற்படாத தொகையாக அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய தொகையாகவிருப்பின் அக்கடனை 36 மாத சமதொகைத் தவணைப்பணங்களாகத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

(ஈ) எடுக்கப்படும் கடன் ஒன்பது மாத அடிப்படைச்சம்பளத்திற்கு மேற்படாத தொகையாக அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய தொகையாகவிருப்பின் அக்கடனை 48 மாத சமதொகைத் தவணைப்பணங்களாகத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

(உ) எடுக்கப்படும் கடன் ஒருவருட அடிப்படைச் சம்பளத்திற்கு மேற்படாத தொகையாக அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஆகக்கூடிய தொகையாகவிருப்பின் அக்கடனை 60 மாத சமதொகைத் தவணைப்பணங்களாகத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

(2) 23 ஆம் விதியின் கீழ் பெற்றுக் கொண்ட கடனை ஓர் அங்கத்தவர் திருப்பிக் கொடாவிட்டாலோ திருப்பிக்கொடுக்க மறுத்தாலோ திருப்பிக் கொடுப்பதில் அசட்டைகாட்டினாலோ அக்கடன் வழங்கப்பட்ட காலத்தில் நிதிக்கணக்கில் அவர் பெயரில் வரவு வைக்கப்பட்டிருக்கும் பணங்களிலிருந்து அக்கடன் தொகை ஒரேமுறையில் அல்லது தவணைப்பண அடிப்படையில் முற்றாக அறவிடப்படும். நிர்வாகக்குழு அக்கடனை பிணைக்காரர்களிடமிருந்து எம்முறையில் அறவிடுதல் தகுதியெனக் கருதுகிறதோ அம்முறையில் அறவிடுவதற்கு உரித்துடையதாகும். அக்கடன் திருப்பிக் கொடுக்கப்படும்வரை அல்லது முற்றாக அறவிடப்படும்வரை அப்பிணைகாரர்கள் எவ்வித கடனையும் பெற உரித்துடையவராகார்.

**பாக்கிப்பணம்**

25. ஓர் அங்கத்தவர் புகையிரதத் திணைக்கள அல்லது வேறு அரசாங்கத் திணைக்களச் சேவையிலிருந்து நீக்கப்பட்டால் அத்தகைய அங்கத்தவர்களிடமிருந்து சட்ட நடவடிக்கை மூலம் அப்பணத்தை அறவிடலாம்.

**சில்லறைப்பணம்**

26. செயலாளரும் பொருளாளருமானவர், சில்லறைப்பணச் செலவுகளுக்காக கூட்டுத்தாபனப் பணத்தில் 150/— ரூபாவிற்கு மேற்படாத தொகையை வைத்துக்கொள்ளலாம்.

**பங்கிலாபங்கள்**

27. நிதிவருட இறுதியில் ஐந்தொகையில் காட்டப்படும் கூட்டுத்தாபன இலாபங்கள் 21 ஆம் விதியில் ஏற்பாடாகியுள்ள (ரூபா 10,00,000/—) பத்து இலட்சம் ரூபாவாக உயரும்வரை நன்கொடை ஒதுக்க நிதியில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். அதன்பின்னர் கூட்டுத்தாபனத்தின் பங்கிலாபங்கள் அங்கத்தவர்களின் பெயரில் வரவு வைக்கப்பட்டிருக்கும் பணங்களின் விகிதாசாரப்படி அங்கத்தவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும் அங்கத்தவர்களுக்குச் சேரும் பங்கிலாபங்கள் கூட்டுத்தாபனக் கணக்குப் புத்தகங்களில் அவர்கள் பெயரில் வரவுவைக்கப்படும்.

**விசேட பொதுக் கூட்டம்**

28. (1) தலைவரின் எழுத்துமூலமான கோரிக்கை மீது செயலாளரும் பொருளாளருமானவர், கூட்டுத்தாபன அங்கத்தாவகளின் விசேட பொதுக்கூட்டமொன்றைக் கூட்டலாம். அத்தகைய கூட்டத் தேதி, நேரம் என்பனவற்றையும், நோக்கத்தையும் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் எழுத்தில் அறிவிக்கவேண்டியதுடன் அத்தகைய கூட்டத்திற்கு முன்பு ஏழு நாட்களுக்குக் குறையாத காலத்துள் குறைந்தது இரண்டு உள்ளூர்ச் செய்திப் பத்திரிகைகளிலேனும் ஓர் அறிவித்தலைப் பிரசுரித்தல் வேண்டும். அத்தகைய கூட்டமெதிலும் அறிவித்தலிற் குறிப்பிடப்பட்ட விடயத்தைத்தவிர வேறு விடயம் விவாதிக்கப்படலாகாது.

(2) கட்டளைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் விதிகளுக்கமைவாக 50 க்குக் குறையாத அங்கத்தவர்களால் எழுத்தில் சமர்ப்பிக்கப்படும் ஒரு வேண்டுதலின் மீது செயலாளரும் பொருளாளருமானவர் கூட்டுத்தாபன அங்கத்தவர்களின் விசேட பொதுக்கூட்டமொன்றைக்கூட்டலாம் ; அத்துடன் அத்தகைய கூட்டம் நிர்வாகக்குழுவால் பணிக்கப்படுநதற்கேற்பக் கூட்டப்படல் வேண்டும்.

(3) நிர்வாகக் குழுக்கூட்டமொன்றில் அதிகப்படியான வாக்குக்களால் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின் மீது அல்லது நிர்வாகச் செயற்குழுவினில் குறைந்தது ஏழு அங்கத்தவராகளால் எழுத்தில் சமர்ப்பிக்கப்படும் ஒரு வேண்டுகோளின் மீது அல்லது 50 அங்கத்தவர்களுக்குக் குறையாதவர்களால் எழுத்தில் சமர்ப்பிக்கப்படும் ஒரு வேண்டுதலின் மீது செயலாளரும் பொருளாளருமானவர் அங்கத்தவர்களின் விசேட கூட்டமொன்றைக் கூட்டலாம்.

(4) செயலாளரும் பொருளாளருமானவர் ஒரு சுற்றறிக்கையை விடுப்பதன் மூலமும் செய்திப் பத்திரிகைகளில் ஓர் அறிவித்தலைப் பிரசுரிப்பதன் மூலமும் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ள விடயங்களை அங்கத்தவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அத்தகைய அறிவித்தலில் குறிப்பிட்ட விடயத்தைத் தவிர வேறு எந்த விடயமும் அத்தகைய கூட்டத்தில் எடுக்கப்படவோ நடாத்தப்படவோ கூடாது.

**வருடாந்தப் பொதுக் கூட்டம்**

29. (1) கூட்டுத்தாபன அங்கத்தவர்களின் வருடாந்தப்பொதுக் கூட்டமொன்று ஒவ்வொரு வருடமும் மார்ச்சு மாதம் 31 ஆந் தேதிக்குப் பிந்தாமல் கொழும்பில் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல் அக்கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட தேதிக்குக் குறைந்தது ஏழுநாட்களுக்கு முன்னர் சகல அங்கத்தவர்களுக்கும் அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் இரண்டு செய்திப் பத்திரிகைகளிலேனும் பிரசுரிக்கப்படவேண்டியதுடன் அங்கத்தவர்களுக்குச் சுற்றறிக்கைகள் மூலமும் தெரிவிக்கப்படல் வேண்டும்.

(3) வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் எந்தத்தீர்மானத்தையும் பிரேரிக்கவிரும்பும் எந்த அங்கத்தவரும் அத்தகைய தீர்மானத்தைக் கூட்டத்திற்கு நிர்ணயித்த தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் செயலாளரும் பொருளாளருமானவருக்கு எழுத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**கோரம்**

30. கூட்டுத்தாபனத்தின் எந்தப் பொதுக்கூட்டத்திலும் அங்கத்தவர் குறைவெண் (கோரம்) 150 அங்கத்தவர்களாக இருக்க வேண்டும்.

**உத்தியோகத்தர் தெரிவு**

31. (1) தலைவர் பதவி, இரு உபதலைவர்கள் பதவிகள், நிர்வாகக்குழுவின் 12 அங்கத்தவர்கள் ஆகிய உத்தியோகத்தர்கள் கூட்டுத்தாபன அங்கத்தவர்களிடையிருந்து வருடந்தோறும் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவார்கள். உத்தியோகத்தர் பதவிகளுக்கும் நிர்வாகக்குழுவின் 12 அங்கத்தவர் தெரிவுக்குமான நியமனப் பத்திரங்கள் அங்கத்தவர்களிடமிருந்து கோரப்படும். அத்தகைய நியமனப் பத்திரம் ஒவ்வொன்றும் கூட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குக் குறைந்தது ஆறு வாரங்களுக்கு முன்னர் செயலாளரும் பொருளாளருமானவருக்குக் கிடைக்க வேண்டும்.

(2) அங்ஙனம் பெற்றுக்கொள்ளப்பட்ட நியமனப் பத்திரங்கள் 32 ஆம் விதிகளுக்கமைவாக உள்ளனவென்பதை நிர்வாகக்குழு உறுதிப்படுத்தவேண்டியதுடன் நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட அபேட்சகர்களின் பெயர்ப்பட்டியலொன்றைக் கூட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குக் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னர் உறுப்பினர்கள் மத்தியில் சுற்றறிக்கை செய்தலும் வேண்டும்.

(3) தலைவர், இரண்டு உபதலைவர்கள், நிர்வாகக்குழுவின் 12 அங்கத்தவர்கள் ஆகியோரின் தெரிவு இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகும். இவ்விதமாகத் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களும் நிர்வாகக்குழுவினரும் அடுத்த பொதுக்கூட்டம் நடைபெறும்வரை பதவியிலிருப்பர்.

(4) பொதுக்கூட்டத்தில் செயலாளரும் பொருளாளருமானவர் அங்கு பிரசன்னமாயிருக்கும் அங்கத்தவர்களுக்கு வாக்குச்சீட்டை விநியோகிப்பார். அவர்கள் தம்மிடம் கொடுக்கப்பட்ட வாக்குச்சீட்டில் அச்சிட்டிருக்கும் அபேட்சகர்களின் பெயருக்கெதிரே " × " அடையாளமிட்டு செயலாளரும் பொருளாளருமானவரிடம் அல்லது அவ்வேலைக்கென நியமிக்கப்பட்டிருக்கும் அங்கத்தவரிடம் அல்லது அங்கத்தவர்களிடம் கையளிக்கவேண்டும்.

(5) தலைவர், உப தலைவர்கள், 12 அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாகக்குழு ஆகியவர்களைத் தெரிவுசெய்ய ஒவ்வொரு அங்கத்தவருக்கும் 15 வாக்குக்கள் உள. இவ்விதிகளுக்கிணங்க அமையாத எந்த வாக்குச் சீட்டும் நிராகரிக்கப்படும்.

**அபேட்சகர்களின் தகைமை**

32. (1) தலைவர், அல்லது உப தலைவர் பதவிக்குப்போட்டியிடும் ஓர் அங்கத்தவர் கூட்டுத்தாபனத்தில் இருபது வருடத்திற்கு மேற்பட்ட காலம் அங்கத்தவராயிருத்தல் வேண்டும். அத்துடன் அவருக்கு அரசகரும மொழியில் திறமையும் ஆங்கிலத்தில் போதிய அறிவும் இருத்தல் வேண்டும்.

(2) நிர்வாகக் குழுவில் அங்கத்துவத்துக்குப் போட்டியிடும் ஓர் அங்கத்தவர் 10 வருடத்திற்கு மேற்பட்ட காலம் அங்கத்தவராயிருத்தல் வேண்டும். அத்துடன் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைச் செய்யக்கூடியதாக அரசகரும மொழியில் திறமையுடையவராயிருத்தல் வேண்டும்.

(3) இரண்டுவருடம் தொடர்ந்து உத்தியோகத்தர் பதவியை வகித்த அல்லது நிர்வாகக் குழுவில் அங்கம் வகித்த ஓர் அங்கத்தவர் அடுத்த பொதுக்கூட்டத்தில் மூன்றும் வருடத்தில் அப்பதவிக்குப் போட்டியிடமுடியாது.

**செயலாளரும் பொருளாள ருமானவர் கடமைகள்**

33. (1) கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் செயலாளரும் பொருளாளருமானவர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர் கட்டளைச் சட்டத்தின் 7 ஆது விதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தம் கடமையைச் செய்தல் வேண்டும். மேலும் கூட்டுத்தாபனத்திற்கேற்படும் நட்டத்திற்கு அல்லது சேதத்திற்கு அவரே பொறுப்பாளியாவார். அவரால் ஏற்படும் நட்டத்தை அல்லது சேதத்தை அவரிடமிருந்து அறவிடக் கூட்டுத்தாபனத்துக்கதிராகமுண்டு.

(2) உத்தியோகத்தரால் அல்லது அலுவலக ஊழியர்களால் இழைக்கப்படும் முறையற்ற நடவடிக்கையை அல்லது மோசடியை செயலாளரும் பொருளாளருமானவர் நிர்வாகக்குழுவிற்குத் தெரிவித்தல் வேண்டும்.

(3) செயலாளரும் பொருளாளருமானவர் அசட்டையின் காரணமாகக் கூட்டுத்தாபனத்திற்கு நட்டமேற்படின் செயலாளரும் பொருளாளருமானவரிடமிருந்து அந்நட்டம் அறவிடப்படும்.

(4) நிர்வாகக்குழு அல்லது உத்தியோகத்தர், விதிகளுக்கு முரணாக நடந்து கொள்ளக்கூடாது. நிர்வாகக் குழு அங்கத்தவராலோ உத்தியோகத்தராலோ கூட்டுத்தாபனத்திற்கு நட்டமேற்படுத்தப்படின் அந்நட்டத்தை அவ்வங்கத்தவரிடமிருந்து அல்லது உத்தியோகத்தரிடமிருந்து அறவிடக் கூட்டுத்தாபனத்துக்கு அதிகாரமுண்டு.

**நிர்வாகக்குழுவினது கடமைகள்**

34. (1) நிர்வாகக்குழு கட்டளைச் சட்டத்தினதும் இவ்விதிகளினதும் ஏற்பாடுகளுக்கிணங்க கடமையாற்றுதல் வேண்டும்.

(2) உத்தியோகத்தரெவராலும் நிர்வாகக்குழு அங்கத்தவரால் ஏற்பட்ட நட்டம் அத்தகைய அங்கத்தவரிடம் அல்லது உத்தியோகத்தரிடம் அறவிடப்படுதல் வேண்டும்.

**கடனட்டையுடன் கூடிய வைப்புப் புத்தகமும் விதிநூலும்**

35. (1) ஒவ்வொரு அங்கத்தவரும் அங்கத்தவராகச் சேர்க்கப்பட்டதும் கட்டளைச் சட்டத்தின் பிரதியொன்றையும் இவ்விதிகளின் பிரதியொன்றையும் வைப்புப் புத்தகமொன்றையும் பெறுவார்.

(2) ஒவ்வொரு அங்கத்தவரும் தமது வைப்புப் புத்தகத்தைக் கணக்குப் பரிசோதனைக்கு முன்பும் பின்பும் வருடத்திற்கிருமுறை கூட்டுத்தாபன அலுவலகத்திற்குக் கணக்கு வைக்க அனுப்பவேண்டும். ஒவ்வொரு அங்கத்தவரும் வருடக் கணக்குப் பரிசோதனை நடப்பதற்கு முன்னும் பின்னும் கணக்குக் கூற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றினைப் பெறுவார்.

**கூட்டுத்தாபனச் சொத்து**

36. கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான சகல புத்தகங்கள், கடிதப் பொருட்கள், கடிதக் கோவைகள், தளபாடங்கள், பொருத்தல்கள், மற்றும் பொருட்கள் ஆகியவற்றினைப் பாதுகாக்கும் பொறுப்புச் செயலாளரும் பொருளாளருமானவரைச் சார்ந்ததாகும்.

**நிலைய முகவரி மாற்றம்**

37. ஒவ்வொரு அங்கத்தவரும் தமது நிலைய அல்லது முகவரி மாற்றத்தை எழுத்துமூலம் செயலாளரும் பொருளாளருமானவருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

**நிதி வருடம்**

38. கூட்டுத்தாபனத்தின் நிதி வருடம் ஒரு வருடத்தின் நவம்பர் மாதம் 1 ஆந் தேதி தொடக்கம் அடுத்தவருடத்தின் ஒற்றோபர் மாதம் 31 ஆந் தேதிவரையுமாகும்.

**முறைப்பாடுகளும் விசாரணைகளும்**

39. கூட்டுத்தாபனம் சம்பந்தமாக எந்த அங்கத்தவராலும் கொண்டுவரப்படும் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு புகையிரதத் திணைக்களப் பொது முகாமையாளருக்கு அல்லது திறைசேரிச் செயலாளருக்கு அல்லது பிரதிச் செயலாளருக்கு அதிகாரமுண்டு.

**முன்னைய விதிகளை அகற்றல்**

40. கூட்டுத்தாபனத்தால் இதுவரை ஆக்கப்பட்டுள்ள சகல விதிகளும் இத்தால் அகற்றப்பட்டுள்ளன. அவைஇவ்விதிகளால் செயலற்றவையாக்கப்பட்டுள்ளன.

10–795

---

## முத்திரைக் கட்டளைச் சட்டம்

முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் (247 ம் அத்தியாயத்தில்) 6 ம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினலாக்கப்பட்ட விதி.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஞு ஒக்டோபர் மீ ம் 16 ந் உ.

**விதி**

முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் (247 ம் அத்தியாயத்தில்) 6 ம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1966 ம் ஆண்டு ஆகஸ்டு 5 ம் தேதிய 14,707 ம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ம் தேசிய 14,925 ம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதியினால் கடைசியாகத் திருத்தப்பட்டதுமான விதியானது அதற்கான அட்டவணையில் 82 ம் அம்சத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அம்சத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

"83. ஐக்கிய நாடுகள் சபையின் சின்னத்தையும், சமாதானத்தைக் குறிக்கும் ஒரு புருவையும், முன்னேற்றத்தைக் குறிக்கு முகமாக நீளத்தால் அதிகரித்துக் கொண்டே போகும் பல கோடுகளையும் தாங்கியதாக வருக்கும் ரூபா 2/- மதிப்புள்ள அஞ்சல் இறைவரி முத்திரைகள்."

10–873

---

## விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

(நானாவித பொருட்களின்) பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி, திரு. ஐ. ஒ. கே. ஜி. பெர்ணாந்தோ அவர்களால் செய்யப்பட்டு 1970 செப்டெம்பர் 30 ஆந் தேதிய 14,925/5 ஆம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்டதும் கீழே கூறப்பட்டுள்ளதுமான விலைக்கட்டுப்பாட்டு கட்டளையை வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சர் அங்கிகரித்துள்ளார் என (173 ஆம் அத்தியாயமாகிய) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4(7) ஆம் பிரிவின் படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

(1) விலைக்கட்டுப்பாடு (பற்பசை)
1970 இன் 1 ஆம் இலக்கக் கட்டளை

(2) விலைக்கட்டுப்பாடு (பிளாஷ் லைட் பட்டரிகளும் ட்ரான்சிஸ்டர் ரேடியோ பட்டரிகளும்)

(3) விலைக்கட்டுப்பாடு (குடைகள்)
1970 இன் 1 ஆம் இலக்கக் கட்டளை

(4) விலைக்கட்டுப்பாடு (பைசிக்கள் டயர்களும் ட்யூப்களும்)
1970 இன் 1 ஆம் இலக்கக் கட்டளை

ஜே. பி. கெலேகம,
நிரந்தரச் செயலாளர்,
வெளிநாட்டு உள்நாட்டு வியாபார அமைச்சு.

கொழும்பு,
1970, ஒக்டோபர், 5.

10-714

---

## அஞ்சலலுவலகக் கட்டளை சட்டம்

அஞ்சலலுவலகக் கட்டளைச் சட்டத்தின் (190 ம் அத்தியாயத்தில்) 18 ம் பிரிவின் கீழ் அஞ்சற் தந்தித் தொடர்புகள் அமைச்சரினலாக்கப்பட்ட விதி.

செ. குமாரசூரியர்,
அஞ்சற் தந்தித் தொடர்புகள் அமைச்சர்.

கொழும்பு, ஒக்ரோபர் 15, 1970.

**விதி**

அஞ்சலலுவலகக் கட்டளைச் சட்டத்தின் (190 ம் அத்தியாயத்தில்) 16 ம் பிரிவின் கிழாக்கப்பட்டு 1966 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5 ம் தேதிய 14,707 ம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ம் தேதிய 14,925 ம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதியினால் கடைசியாகத் திருத்தப்பட்டதுமான விதியானது, அதற்கான அட்டவணையில் 83 ம் அம்சத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அம்சத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகிறது.

"84. ஐக்கிய நாடுகள் சபையின் சின்னத்தையும். சமாதானத்தைக் குறிக்கும் ஒரு புருவையும், முன்னேற்றத்தைக் குறிக்குமுகமாக நீளத்தால் அதிகரித்துக் கொண்டே போகும் பல கோடுகளையும் தாங்கியதாகவிருக்கும் ரூபா 2 மதிப்புள்ள அஞ்சல் இறைவரி முத்திரைகள்."

10-814

### சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம் (அத்தியாயம் 219)

ஆசுப்பத்திரிச் செயற்குழு, கொழும்பு ஆசுப்பத்திரிகள் தொகுதி

(219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை மேர்வின் சி. பெரேரா அவர்களைக் கொழும்பு ஆசுப்பத்திரிகள் தொகுதிக்கான ஆசுப்பத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவராக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 10 ஒக்ரோபர், 1970.

10-715

---

### சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டம் (அத்தியாயம் 219)

ஆசுப்பத்திரிச் செயற்குழு, கொழும்பு தெற்கு அரசாங்கப் பெரியாசுப்பத்திரி

(219 ஆம் அத்தியாயமான) சௌக்கிய சேவைகள் அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடையும் காலம்வரை திரு. ஏ. டி. தர்மதாச அவர்களைக் கொழும்பு தெற்கு அரசாங்கப் பெரியாசுப்பத்திரிக்கான ஆசுப்பத்திரிச் செயற்குழுவின் அங்கத்தவராக நியமிப்பதில் கௌரவ சௌக்கிய அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார்.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
நிரந்தரச் செயலாளர்.

சௌக்கிய அமைச்சு,
கொழும்பு, 10 ஒக்ரோபர், 1970.

10-716

---

### இணக்கச் சபைகள் சட்டம்

கட்டளை

1959 இன் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 இன் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47(2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆந் திகதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(1), 3(8), 4(1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் இரத்தினசிறி விக்கிரமநாயகா ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின் கீழ் 1968 செற்றம்பர் 27 ஆம் தேதிய 14,821 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 2 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட மெதபலாத கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்திற்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

1. தெறிபெகெ, அங்கெலிபிட்டி, "சந்தசிறி" இல் வசிக்கும் துன்பேலே அங்கெலியேநிசங்க முதியன்சேலாகே ரிகிரி பண்டா நிசங்க அவர்கள்.
2. உடமாதுர, பூற்றுவவில் வசிக்கும் திசாநாயக முதியன்சேலாகே பதுல்லே கெதர இரிபண்டா அவர்கள்.
3. உடமாதுர, அலகொலவெல்ல, எகொடகமையைச் சேர்ந்த கலகெதர முதுகுடே விக்கிரசிங்க முதியன்சேலாகே பொடியப்புகாமி அவர்கள்.
4. களகன்வத்த, அமுனுகேனையைச் சேர்ந்த யாபாமுதியன்சேலாகே அப்புகாமி அவர்கள்.
5. களகன்வத்த, கல்கெற்றிவெல, வெலகிந்தயைச் சேர்ந்த அத்தநாயக முதியன்சேலாகே அப்புகாமி அவர்கள்.
6. களகன்வத்த, கல்கெற்றிவெலவைச் சேர்ந்த கலககெதர குமாரசிங்க முதியன்சேலாகே கின்னி அப்புகாமி அவர்கள்.
7. களகன்வத்த, கல்கெற்றிவெலவைச் சேர்ந்த மான்ன உதும் ஜயசேகர முதியன்சேலாகே புஞ்சிபண்டா அவர்கள்.
8. களகன்வத்த, கல்கெற்றிவெல, கொம்மனையைச் சேர்ந்த அத்தநாயக முதியன்சேலாகே கருணாரத்ன அவர்கள்.
9. களகன்வத்த, கல்கெற்றிவெல, கபுககபிற்றியைச் சேர்ந்த வீரசிங்க முதியன்சேலாகே வன்னகுரால அவர்கள்.
10. அருக்வத்த, தம்பேகாவதென்னையைச் சேர்ந்த லுணுவத்தே கெதர புஞ்சியப்புகாமி ரத்நாயக அவர்கள்.
11. தெருபெகெ, கால்பிற்றியைச் சேர்ந்த குணவத்தன லியனகே கின்னி அப்புகாமி அவர்கள்.
12. தெரிபெகெ, "மாநெல்" இல் வசிக்கும் சோமதிலக சூரசேன கூரே அவர்கள்.
13. தெரிபெகெ, "சித்திரா" இல் வசிக்கும் கோனர முதியன்சேலாகே புஞ்சிபண்டா அகலகும்புர அவர்கள்.
14. தெரிபெகெ, மோரங்ககதென்ன பாடசாலையைச் சேர்ந்த சமரகோன் முதியன்சேலாகே செனவிரத்ன அவர்கள்.
15. கல்கிரந்நொய, அருக்வத்த, தபாற் கந்தோரைச் சேர்ந்த லுணுவத்தேகெதர டிங்கிரி பண்டா ரத்நாயக அவர்கள்.
16. கல்கிரந்நொய, அருக்வத்தையைச் சேர்ந்த புஞ்சி பண்டா நிசங்க அவர்கள்.
17. தெறிபெகெ, "பியசெவன" இல் வசிக்கும் நிசங்க முதியன்சேலாகே துன்பெலே கெதர பியதாச நிசங்க அவர்கள்.

(ஆ) தெறிபெகெ, அங்கெலிப்பிட்டி, "சந்தசிறி" ஐச் சேர்ந்த துன்பேலே அங்கெலியேநிசங்க முதியன்சேலாகே ரிகிரி பண்டா நிசங்க அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக,
நீதி அமைச்சரின் நிரந்தரச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970, ஒத்தோபர் 11 ஆந் நாள்.

10-739

---

### இணக்கச் சபைகள் சட்டம்

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக்கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதற்குள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள இடப்பரப்புக்குள், சொல்லப்பட்ட சட்டம் நடைமுறையிலிருத்தல் வேண்டுமென இதனால் தீர்மானிக்கின்றேன்.

இ. விக்கிரமநாயக்க
நீதி அமைச்சரின் பாராளுமன்றச்
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 ம் ஆண்டு ஒத்தோபர் மீ 11 ந உ.

அட்டவணை

1. கொழும்பு மாவட்டத்திலுள்ள கொழும்பு மாநகரசபையின் பின்வரும் ஒவ்வொரு தொகுதியையும் உள்ளடக்கிய பிரதேசம் :

பிரதேச இல. 1 தேர்தற்றொகுதி இல. 29 தெமட்டக்கொடை.
பிரதேச இல. 2 தேர்தற்றொகுதி இல. 30 வனாத்தமுல்லை.
பிரதேச இல. 3 தேர்தற்றொகுதி இல. 32 குப்பியாவத்தைமேற்கு.
பிரதேச இல. 4 தேர்தற்றொகுதி இல. 34 நாராகேன்பிட்டி.

2. புத்தளம்–சிலாபம் மாவட்டத்திலுள்ள சிலாபம் நகரசபைப் பிரதேசம்.
3. மாத்தளை மாவட்டத்திலுள்ள ரத்தோட்டைப் பட்டினசபைப் பிரதேசம்.
4. கேகாலை மாவட்டத்திலுள்ள மாவநெல்லைப் பட்டினசபைப் பிரதேசம்.
5. அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள அம்பாந்தோட்டை நகரசபைப் பிரதேசம்.

10–740

## இணக்கச் சபைகள் சட்டம்

### 3 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1970 யூன் 16 ஆந் தேதிய 14,910/8 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1965 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள, 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர், இரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், இதற்குள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள இடப்பரப்பு ஒவ்வொன்றுக்கும் இணக்குவோர் குழாம் ஒவ்வொன்றினை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், அத்தகைய இடப்பரப்பு ஒவ்வொன்றினதும் இணக்குவோர் குழாத்துக்கு நியமிக்கப்பட வேண்டிய ஆட்களைப் பற்றி 1970, நவம்பர் 30 ஆந் நாள் அல்லது அதற்கு முன்னர் அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான விதப்புரைகள், பெரும்பாக அரசிறை அலுவலரின் அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவத்தில் எழுத்தில் எனக்குச் செய்யப்படலாமெனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
நீதி அமைச்சரின் பாராளுமன்றச்
செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு, 1970 ம் ஆண்டு ஒத்தோபர் மீ 11 ந உ.

#### அட்டவணை

(1) கொழும்பு மாவட்டத்தினுள்ள கொழும்பு மாநகரசபையின் பின்வரும் ஒவ்வொரு தொகுதியையும் உள்ளடக்கிய பிரதேசம் :

பிரதேச இல. 1 தேர்தற்றொகுதி இல. 29 தெமட்டக்கொடை.
பிரதேச இல. 2 தேர்தற்றொகுதி இல. 30 வணாத்தமுல்லை.
பிரதேச இல. 3 தேர்தற்றொகுதி இல. 32 குப்பியாவத்தை மேற்கு.
பிரதேச இல. 4 தேர்தற்றொகுதி இல. 34 நாராகேன்பிட்டி.
பிரதேச இல. 5 தேர்தற்றொகுதி இல. 44 கிருலப்பனை.

(2) புத்தளம்–சிலாபம் மாவட்டத்தினுள்ள சிலாபம் நகரசபைப் பிரதேசம்.

(3) மாத்தளை மாவட்டத்தினுள்ள ரத்தோட்டை நகரசபைப் பிரதேசம்.

(4) களுத்துறை மாவட்டத்தினுள்ள கொரவலைக் கிராமப் பிரதேசம்.

(5) கேகாலை மாவட்டத்தினுள்ள மாவநெல்லை பட்டினசபைப் பிரதேசம்.

(6) அம்பாறை மாவட்டத்தினுள்ள அக்கரைப்பற்று வடக்கு கிராம சபையின் தேர்தற்றொகுதி இல. 1 முதல் 4 வரை உள்ள பிரதேசம்,

(7) அம்பாறை மாவட்டத்தினுள்ள அக்கரைப்பற்று வடக்கு கிராம சபையின் தேர்தற்றொகுதி இல. 5 முதல் 8 வரை உள்ள பிரதேசம்.

(8) அம்பாறை மாவட்டத்தினுள்ள நிந்தாவூர் கிராமப் பிரதேசம்.

(9) பதுளை மாவட்டத்தினுள்ள பட்டிப்பளைக் கிராமப் பிரதேசம்.

(10) குருநாகலை மாவட்டத்தினுள்ள பொல்காவலைப் பட்டினசபைப் பிரதேசம்.

(11) இரத்தினபுரி மாவட்டத்தினுள்ள நிவித்திகலைக் கிராமப் பிரதேசம்.

(12) இரத்தினபுரி மாவட்டத்தினுள்ள பல்லேபற்று நவதுன் கோரளைக் கிராமப் பிரதேசம்.

(13) இரத்தினபுரி மாவட்டத்தினுள்ள பன்னிலப்பற்று அட்டகலன் கோரளைக் கிராமப் பிரதேசம்.

(14) அனுராதபுர மாவட்டத்தினுள்ள எப்பாவலைக் கிராமப் பிரதேசம்.

(15) அனுராதபுர மாவட்டத்தினுள்ள தெற்கு நுவரகம் கோரளைக் கிராமப் பிரதேசம்.

(16) அனுராதபுர மாவட்டத்தினுள்ள தம்புத்தேகமைக் கிராமப் பிரதேசம்.

(17) அனுராதபுர மாவட்டத்தினுள்ள கட்டியாவைக் கிராமப் பிரதேசம்.

(18) குருநாகலை மாவட்டத்தினுள்ள மகவக் கிராமப் பிரதேசம்.

(19) அம்பாந்தோட்டை மாவட்டத்தினுள்ள அம்பாந்தோட்டை நகர சபைப் பிரதேசம்.

10–741

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### *1971 ம் ஆண்டுக்குத் துப்பாக்கி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல்*

#### புத்தள மாவட்டம்

*புத்தளம் மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட துப்பாக்கிகளை 1971 ம் ஆண்டிற்குப் புதுப்பித்தல் இம்மாவட்டத்தில் உள்ள பிரிவுக் காரியாதிகாரிகளும் 1970 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 1 ம் திகதியிலிருந்து செய்யப்படும். ஆகவே புதுப்பித்தல் சம்பந்தமான சகல விண்ணப்பங்களும் அந்தந்தப் பிரிவு காரியாதிகாரிகளுக்கு அனுப்பப்படல் வேண்டும். 1970 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்குள் அனுமதிப்பத்திரங்கள் யாவும் புதுப்பிக்கப்படல் வேண்டும். 1971 ம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெறுவோர் 1970 ம் ஆண்டிற்கான தமது அனுமதிப்பத்திரத்தையும், துப்பாக்கியையும் பரிசோதனைக்காக, எனக்காகக் கடமையாற்றும் உத்தியோகத்தருக்கு 1971 ம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெறமுன் காண்பித்தல் வேண்டும். 1970 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந் திகதிக்குப்பின் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் அனுமதிக்கப்பட்டால், அவற்றிற்கு அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்குச் சமமான அபராதமும் விதிக்கப்படும்.*

*2. பாவிக்க முடியாத துப்பாக்கிகள் வைத்திருப்பவர்களும் 1971 ம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுதவர்களும் துப்பாக்கிகளை அவற்றின் அனுமதிப்பத்திரத்துடன் பிரிவுக் காரியாதிகாரியிடமோ அல்லது எனது கந்தோரிலோ 1970 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ந் திகதிக்குள் ஒப்படைத்தல் வேண்டும்.*

*3. 1971 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ந் திகதிக்குள் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்கத் தவறினால் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்.*

*பி. ஜி. புஞ்சிகேவா,*
*புத்தளம் அரசாங்க அதிபர்.*

*புத்தளம் கச்சேரி,*
*1970 ம் வருடம் செப்தெம்பர் மாதம் 9 ந் திகதி.*

*10-732*

---

### துப்பாக்கி உத்தரவுச் சீட்டுக்கள் புதுப்பித்தல்—1971

#### குருநாக்கல் மாவட்டம்

1971 ம் ஆண்டுக்குரிய துப்பாக்கி உத்தரவுச் சீட்டுகள் புதுபித்தல் 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ம் திகதி ஆரம்பமாகும். துப்பாக்கிச் சொந்தக்காரர்கள் அவர்கள் பகுதிப் பதிவுக் காரியாதிகாரிக்கு மனுச் செய்தல் வேண்டும். 1971 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ந் திகதி வரை அவ்வப் பகுதி பதிவுக் காரியாத்காரியால் துப்பாக்கி உத்தரவுச் சீட்டுகள் புதுபித்துக் கொடுக்கப்படும். இத்திகதிக்குப்பின் புதுபித்தல் குருநாக்கல் கச்சேரியில் நடைபெறும்.

காரியாதிகாரிகளின் முகவரிகள் பின்வருமாறு :—

(1) டீ. ஆர். ஓ. தம்பதனி ஹத்பத்து, பொல்காவலை.
(2) டீ. ஆர். ஓ. தேவமதி ஹத்பத்து, வாரியபொல.
(3) டீ. ஆர். ஓ. ஹிரியால ஹத்பத்து, இப்பாகமுவ.
(4) டீ. ஆர். ஓ. குளியாபிற்றிய, குளியாபிற்றிய.
(5) டீ. ஆர். ஓ. பண்ணல, பண்ணல.
(6) டீ. ஆர். ஓ. பிங்கிரிய, பிங்கிரிய.
(7) டீ. ஆர். ஓ. நிகவெரடிய, நிகவெரடிய.
(8) டீ. ஆர். ஓ. கல்கமுவ, கல்கமுவ.
(9) டீ. ஆர். ஓ. மாகோ, மாகோ.
(10) டீ. ஆர். ஓ. வேவுட வில்லி ஹத்பத்து, குருநாக்கல்.
(11) டீ. ஆர். ஓ. மாவதகம, மாவதகம.

துப்பாக்கி உத்தரவுச் சீட்டுக்களின் பேரில் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. உத்தரவுச் சீட்டுக்கள் இழந்தவிடத்து ரூபாய் 1/- செலுத்தி அவ்வப்பகுதி பதிவுக்காரியாதிகாரியிடமிருந்து துப்பாக்கி உத்தரவுச் சீட்டு இழப்புச் சான்றிதழ் ஒன்றைப்பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். பழைய உத்தரவுச் சீட்டோ அல்லது துப்பாக்கி உத்தரவுச் சீட்டு இழப்புச் சான்றிதழோ சமர்பிக்காதவிடத்து புதுபிக்கப்படமாட்டாது. மேற்குறிப்பிட்ட காலத்தில் குருநாக்கல் கச்சேரியில் மனுப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 1970 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ துப்பாக்கிச் சொந்தக்காரர்கள் துப்பாக்கிச் சீட்டுக்களைப் புத்பிக்கத்தவறுவாராயின் உத்தரவுச்

சீட்டுக்களுக்குச் செலுத்தவேண்டிய தொகையுடன் அதே அளவு தொகை குற்றமாக அறவிடப்படும். துப்பாக்கிச் சொந்தக்காரர்கள் 1971 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் உத்தரவுச் சீட்டுக்கள் புதுபிக்கத்தவறினால் அவரின் மேல் வழக்குத் தொடரப்படும்.

உத்தரவுச் சீட்டுக்கள் புதுபித்தற்கு மனுச்செய்யுங்கால் ஒவ்வொரு துப்பக்கியையும் எனது அதிகாரத்தின் பேரில் எனக்காக உத்தரவுப் பத்திரங்கள் புதுபிக்கும் உத்தியோகத்தர்களின் பரிசோதனைக்குக் காட்டவேண்டும். துப்பாக்கி பாவிக்கமுடியாத நிலையிலிருக்குமாயின் அந்தப் பகுதி பதிவுக் காரியாதிகாரியிடம் 1970 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னாகவோ அதையும் அதனுடன் 1970 ம் ஆண்டுக்குரிய உத்தரவுச் சீட்டையும் ஒப்படைக்க வேண்டும். அப்படி செய்யத்தவறினால் துப்பக்கிச் சொந்தக்காரர்கள் 1971 ம் ஆண்டுக்குரிய உத்தரவுச் சீட்டை அதற்குரிய கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டியவராவார்.

எச். பி. திசாநாயக,
அரசாங்க அதிபர், குருநாக்கல் மாவட்டம்.

குருநாக்கல் கச்சேரி,
1970 ம் ஆ ஒக்டோபர் மீ 9 ந உ.

10–721

---

## துவக்கு முதலியவற்றின் 1971 ம் ஆண்டுக்குரிய அனுமதிச் சீட்டுப் புதுப்பித்தல்—மாத்தளை மாவட்டம்

இத்தால் சகலருக்கும் அறிவிப்பது யாதெனில் மாத்தளை மாவட்டத்தில் உள்ள பிரிவுக் காரியாதிகாரிகள் தங்கள் பிரிவுகளில் பாவிக்கப்படும் கைத்துப்பாக்கி சுழற் துப்பாக்கி தவிர்ந்த ஏனைய வற்றிற்கு 1971 ம் ஆண்டிற்குரிய அனுமதிச் சீட்டுக்களை 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ம் திகதியிலிருந்து புதுப்பிப்பார்கள். கைத்துப்பாக்கி சுழற் துப்பாக்கி ஆகியவற்றின் அனுமதிச் சீட்டுக்கள் அதே திகதியிலிருந்து மாத்தளைக் கச்சேரியிலிருந்து புதுப்பிக்கப்படும்.

2. 1970 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் தங்கள் அனுமதிச் சீட்டுக்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென பொதுமக்களை அறிவுறுத்துகின்றனர். துவக்கு முதலியவைகளை காரியாதிகாரிகள் முன்னும், கைத்துப்பாக்கி, சுழற் துப்பாக்கி முதலியவைகளை எம் முன்னிலையிலும் அனுமதிச் சீட்டுப் புதுப்பிக்கும் நேரத்தில் பரிசிலனைக்குக் கொண்டுவரல் வேண்டும். அதே நேரத்தில் 1970 ம் ஆண்டு அனுமதிச் சீட்டுக்களைக் கொடுத்தே 1971 ம் ஆண்டு அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

3. 1970 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்குப் பின்னர் வரும் புதுப்பித்தற்கான விண்ணப்பங்கள் 100% தெண்டக் கட்டணங்களுடனேயே ஏற்றுக் கொள்ளப்படும். 1971 ம் ஆண்டு அனுமதிச் சீட்டுக்களைப் புதுப்பிக்க விரும்பாதவரும், பாவிக்க முடியாத துவக்கு வேறு காரணத்திற்காகவும் தங்கள் துவக்கு முதலியவைகளை 1970 ம் ஆண்டு 31 ம் திகதிக்கு முன்னர் காரியாதிகாரியிடமோ அல்லது என்னிடமோ ஒப்படைக்க வேண்டும்.

4. இவ்வருடத்து அனுமதிச் சீட்டுக் காட்ட முடியாதவிடத்து அனுமதிக் கட்டணத்துடன் மேலதிகமாக ரூபா 1 தொலைந்து போன ஒவ்வொரு அனுமதிச் சீட்டுக்கும் செலுத்த வேண்டும்.

5. 1971 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் திகதிக்குள் 1971 ம் ஆண்டு அனுமதிச் சீட்டுக்களைப் பெருதவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்.

எச். ஏ. பீ. அபயவர்த்தன,
அரசாங்க அதிபரும், மாத்தளை மாவட்ட
அனுமதிச் சீட்டு வழங்குபவரும்.

கச்சேரி,
மாத்தளை,
1970, ஒக்ரோபர் 12 ம் திகதி.

10-843

---

## 1971 ம் ஆண்டிற்குரிய துவக்கு முதலியவற்றின் உத்தரவுப் பத்திரம் புதுப்பித்தல்

துவக்கு முதலியவற்றின் சொந்தக்காரர்கள் தங்கள் உத்தரவுப் பத்திரங்களை 1971 ம் ஆண்டு புதுப்பித்தற்கு 1970 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். **1970 ம் ஆண்டுக்குரிய உத்தரவுப் பத்திரமும் துப்பாக்கிகளையும் பரிசோதனைக்கு கொண்டுவரல் வேண்டும்.** 1970 ம் ஆண்டுக்குரிய உத்தரவுப் பத்திரம் கைவசம் இல்லையாயின் உத்தரவுப் பத்திர பிரதிக்காக, மேலதிகமாக ரூபா 1/- செலுத்தப்படல் வேண்டும். உத்தரவுப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் புதுப்பிக்கப்படா விட்டால், உத்தரவுப் பத்திரத்திற்குரிய பணத்துடன் அதற்கேற்ற சமமான தொகை கூடுதலாக கட்டப்படல் வேண்டும்.

2. கொழும்பு, தெஹிவளை–கல்கிசை மாநகரசபை, கோட்டே, கொலன்னாவை நகரசபை, மகரகம பட்டினசபை, கொட்டிகாவத்த (மேற்கு கேவாகம் கோறளே காரியாதிகாரியின் பிரிவில் பள்ளே பத்துவவில் உள்ள இலக்கம் 491 க் கொண்ட கிராம சேவையாளர் பிரிவு தவிர்த்து), முள்ளேரியாவ பட்டினசபை (மேற்கு கேவாகம் கோறளே காரியாதிகாரியின் பிரிவில் அதிகாரிப் பத்துவவில் உள்ள இலக்கம் 501, முள்ளேரியாவ வடக்கு கிராம சேவையாளர் பிரிவு இலக்கம் 502, முள்ளேரியாவ உடுமுள்ள கிராம சேவையாளர் பிரிவு இலக்கம் 503, முள்ளேரியாவ ஹிம்புட்டான கிராம சேவையாளர் பிரிவு பள்ளேபத்துவவில் இலக்கம் 475 வெளிவிற்ற கிராம சேவையாளர் பிரிவு ஆகியவை தவிர்த்து) கோட்டே–கல்கிசை கிராமச் சங்க எல்லைகள் உட்பட கொழும்புக் காரியாதிகாரியின் பிரிவில் வசிக்கும் துப்பாக்கி முதலியவற்றின் சொந்தக்காரர்கள் தங்கள் உத்தரவுப் பத்திரங்களைப் புதுப்பிப்பதற்கு கொழும்புக் கச்சேரியில் விண்ணப்பிக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட பந்தி 2 ல் அல்லாத பிற பகுதிகளில் வசிக்கும் துவக்கு முதலியவற்றின் சொந்தக்காரர்கள் அவ்வப் பகுதிகளில் உள்ள பிரிவுக் காரியாதிகாரிகளிடம் உத்தரவுப் பத்திரங்களைப் புதுப்பிப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

4. 1971 ம் ஆண்டுக்குரிய உத்தரவுப் பத்திரக் கட்டணங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | ஒவ்வொரு ஒற்றைக் குழாய்ச் சன்னத்துவக்கு .. | 1 00 |
| 2. | ஒவ்வொரு இரட்டைக் குழாய்ச் சன்னத்துவக்கு .. | 2 00 |
| 3. | சுழல் துப்பாக்கி அல்லாத தானாக இயங்கும் கைத்துப்பாக்கி அல்லாத கைத்துப்பாக்கி, ஒற்றைக்குழல் தோட்டாத் துப்பாக்கி ஒவ்வொன்றிற்கும் .. .. | 2 50 |
| 4. | ஒவ்வொரு இரட்டைக் குழாய்த் தோட்டாத் துப்பாக்கி .. | 5 00 |
| 5. | ஒவ்வொரு மூன்று குழாய்த்துவக்கு .. .. | 7 50 |
| 6. | றைபிள் துவக்கு (வாய்வு றைபிள் உட்பட) .. | 10 00 |
| 7. | ஒவ்வொரு சுழல் துப்பாக்கி அல்லது தானாக இயங்கும் துப்பாக்கி (பிஸ்டல்) .. .. .. | 25 00 |

எல். பி. விக்கிரமாராய்ச்சி,
பதில் கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர்.

கொழும்புக் கச்சேரி,
1970 ம் ஆ ஒற்றோபர் மீ 16 ந உ.
10–866

---

## இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

### புகையிரதக் கடவைத் திருத்த வேலைகள்

வட பாதையில் குருநாக்கலுக்கும் வெல்லவ புகையிரத நிலையங்களுக் கிடையில 60 மைல் 12 சங்கிலி தூரத்தில் வீற்றிருக்கும் புகையிரதக் கடவை திருத்த வேலைக்காக வெள்ளிக்கிழமை 6.11.70 ம் திகதி காலை 7.00 மணி முதல் இரவு 11.00 மணிவரையும், சனிக்கிழமை 7.11.70 ம் திகதி காலை 5.00 மணி முதல் மாலை 6.00 மணிவரையும் பூரணமாக இல்லாது தடை செய்யப்படும். அத்துடன் திருத்த வேலைகள் பாதிக்கப் படாதிருக்கும் பொருட்டு வெள்ளிக்கிழமை 6.11.70 ம் திகதி இரவு 11.00 மணி முதல் சனிக்கிழமை 7.11.70 ம் திகதி காலை 5.00 மணி வரையும் பூரணமாகத் தடை செய்யப்படும். பூரணமாகத் தடை செய்யப் படும் வேலையில் வாகனங்கள் (1) படகமுவ-ஹிரிபிட்டிய பாதையினூடாக குருநாக்கலுக்குத் திருப்பப்படும். (2) படகமுவ—வெல்லவ பாதையினூடாகவும் குருநாக்கலுக்குத் திருப்பப்படும்.

ஜே. போல் சேனாதன,
பிரதான புகையிரத அதிபருக்காக.

10–854

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் .. | 2.10.70 | வெள்ளி .. | 25. 9.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 9.10.70 | வெள்ளி .. | 2.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 16.10.70 | வெள்ளி .. | 9.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 23.10.70 | வெள்ளி .. | 16.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 30.10.70 | வெள்ளி .. | 23 10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| நவெம்பர் .. | 5.11.70 | வியாழன் .. | 30.10.70 | வெள்ளி .. | பி.ப. 3.30 |
| | 12.11.70 | வியாழன் .. | 5.11.70 | வியாழன் .. | ந.ப. 12.00 |
| | 20.11.70 | வெள்ளி .. | 12.11.70 | வியாழன் .. | ந.ப. 12.00 |
| | 27.11.70 | வெள்ளி .. | 20.11.70 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| திசெம்பர் ... | 4.12.70 | வெள்ளி .. | 27.11.70 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 11.12.70 | வெள்ளி .. | 4.12.70 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 18.12.70 | வெள்ளி .. | 10.12.70 | வியாழன் .. | பி.ப. 3.30 |
| | 24.12.70 | வியாழன் .. | 17.12.70 | வியாழன் .. | பி.ப. 3.30 |
| | 31.12.70 | வியாழன் .. | 24.12.70 | வியாழன் .. | பி.ப. 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு யூன் மீ 2-ஆந் வ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.